Enable | Enlighten | Enrich
(Deemed to be University)
(Under Section 3 of UGC Act 1956)

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

(கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
கோயம்புத்தூர் - 641 021.

# தமிழில் பிற துறைகள்
# பன்னாட்டுக் கருத்தரங்கம்

21 நவம்பர் 2015, சனிக்கிழமை

தமிழ்த்துறை

## நூல் பற்றிய விவரங்கள்

# தமிழில் பிற துறைகள்


| | |
|---|---|
| பொருள் | : தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் |
| மொழி | : தமிழ் / ஆங்கிலம் |
| நூல்அளவு | : டெமி 1/4, புள்ளி 11 |
| படிகள் | : 150 |
| பக்கங்கள் | : 400 |
| முதற்பதிப்பு | : நவம்பர் 2015 |
| விலை | : 400/- |
| அச்சு | : ஏசியன் அச்சகம், சுந்தராபுரம், கோவை. |
| வெளியீடு/ உரிமை | : தமிழ்த்துறை<br>கற்பகம் உயர்க்கல்விக் கலைக்கழகம்<br>கோவை – 21 |
| ஐ.எஸ்.பி.என். எண் | : 978 - 81 – 928302 – 3 – 0 |


## BIBLIOGRAPHICAL DATA

# TAMIZHIL PIRA THURAIGAL


| | |
|---|---|
| Subject | : Tamil Research Articles |
| Language | : Tamil |
| Book size | : 1/8 |
| Pages | : 400 |
| First edition | : November,2015 |
| Price | : 400/- |
| Printing | : Asian achagam<br>Sundrapuram,covai. |
| Publication/Rights | : Dept of tamil,<br>Karpagam Academy of Higher Education,<br>Coimbatore-641021. |
| ISBN Number | : h978-81-928302-3-0 |

| | | |
|---|---|---|
| 98. | புறநானூற்றில் அறச்சிந்தனைகள் - முனைவர் சு.பாஸ்கர் | 284 |
| 99. | பழந்தமிழ் இலக்கியங்களில் பறவைகள் - டி.குமாரன் | 286 |
| 100. | சங்க இலக்கியத்தில் வழிபாடுகள் - பா.அருள்ஜோதி | 289 |
| 101. | சங்க இலக்கியங்கள் உணர்த்தும் சுற்றுச்சூழல் - முனைவர் க.தனலட்சுமி | 292 |
| 102. | தொல்காப்பியம் காட்டும் சமுதாயம் - மு.ஜமுனா | 294 |
| 103. | பெண்ணியத் திறனாய்வு - முனைவர் அ.ஸ்ரீதேவி ராமலிங்கம் | 295 |
| 104. | பாரதக் கதையில் கா்ணன் - முனைவர் அ.பிரசில்லா | 297 |
| 105. | பழந்தமிழ் இலக்கியத்தில் தலைமைப்பண்புகள் ப.கணேஷ் வடிவேல். | 301 |
| 106. | பாலக்காடு மாவட்டத் தமிழின மக்களிடையே வழக்கிலிருக்கும் நம்பிக்கைகள் ஒரு பார்வை - முனைவர் செ.ஆறுச்சாமி | 304 |
| 107. | திருமணமும் கோள்களின் தாக்கமும் - ஓர் ஆய்வு - ம.வடிவேல் [1] முனைவர் V.ஜெயபால்[2] | 309 |
| 108. | திருமணமும் கோள்களின் தாக்கமும் - ஓர் ஆய்வு ம.வடிவேல்[1] முனைவர் V.ஜெயபால்[2] | 313 |
| 109. | வள்ளுவத்தில் விலங்கியல் சிந்தனைகள் - முனைவர் க.லதா | 319 |
| 110. | பாவண்ணன் படைப்பில் தொன்மச் சிந்தனைகள் - க.ரேவதி | 321 |
| 111. | புறப்பொருள் வெண்பாமாலையில் நாட்டுப்புறவியல் கூறுகள் - முனைவர் சி.சொர்ணமாலா | 323 |
| 112. | காளமேகம், கம்பர் பாடல்களில் உணவியல் - திருமதி ச.அ.சுஜா | 325 |
| 113. | தமிழிசைப்பாடல் பரிபாடலில் இசைக்கூறுகள் - முனைவர் நா.ரேணுகா | 327 |
| 114. | தொகை நூல்களுள் உணவியல் கூறுகள் - முனைவர் இரா.பொன்னி | 330 |
| 115. | படைப்புகள் உணர்த்தும் படிப்பினைகள் - முனைவர் இரா.ஏஞ்சல் | 332 |
| 116. | உயிருக்குள் தாகத்தில் சமூகச் சிந்தனைகள் - நா.கிருஷ்ணராஜ் | 336 |
| 117. | நோய் தீர்க்கும் நட்சத்திர மரங்கள் - சித்திரை நட்சத்திரம் - வில்வமரம் இரா. புருஷோத்தமன்,. முனைவர் கணேசன்.ஆ, | 340 |
| 118. | வெள்ளெருக்கும் திருவோண நட்சத்திரமும் -புருஷோத்தமன்.இரா, முனைவர் கணேசன்.ஆ | 342 |
| 119. | கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் நாட்டுப்புறத் தொழில்சார் நுட்பங்கள் - முனைவர் பொ.சுதாராணி | 344 |
| 120. | தமிழில் கணிதம் - முனைவர் ப. கோமதி சுப்பிரமணியம் | 346 |
| 121. | சான்றோர்களின் படைப்பில் பெண்ணியம் - ச.தனலெட்சுமி | 348 |
| 122. | தீர்த்தங்களும் தெய்வ நம்பிக்கைகளும் மதுரைப்பகுதி ஓர் ஆய்வு - சி.மாணிக்கராஜ் | 352 |
| 123. | சிலம்பில்இனவரைவியல் - முனைவர் த.கவிதா | 356 |
| 124. | மதுரைக்காஞ்சி பகரும் திருவிழாக்கள் - மு.துர்க்கா | 359 |
| 125. | கவிஞர் செ.கனிமொழியின் கவித்திறம் - முனைவர் க.லட்சுமி | 361 |
| 126. | பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் குழந்தை உளவியல் - க.மீனாட்சி, முனைவர் ப.தமிழரசி | 363 |
| 127. | தமிழா் பாதுகாப்பு அரண் – முனைவர் த. பாலமுருகன் | 367 |
| 128. | கவிஞர் கே. ரவியின் மின்னற்சுவை - முனைவர் ச.கவிதா | 370 |
| 129. | வள்ளுவர் மற்றும் பா்துருஹரியார் போற்றும் நட்பு – சீ.மாலதி, முனைவர் ச.கவிதா | 373 |

இலக்கினை அடையும் வரை முயன்று போராடும் குணம் வேண்டும் என்று ஆறறிவு கொண்ட மனிதனுக்கு அறிவுறுத்த ஐந்தறிவு கொண்ட பகடு இங்கு உவமைப் பொருளாகிறது. ஒருவன் தான் மேற்கொண்ட முயற்சியில் பகடு போல் முன்னேற வேண்டும் என்பதனை "பகடு மருங்கு ஒற்றியும் மூக்கு ஊன்றியும் தான் தவழ்ந்தும் அறிதின் உய்க்குமாறு போலத் தன் மெய்வருத்தம் நோக்காது முயன்றுய்ப்பான்" என்பார் வை.மு.கோ. (குறள், வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் உரை, ப. 216) ஒருவன் தான் கொண்ட முயற்சியில் தளராது செயல்பட்டு வெற்றியடைய வேண்டும் என்பதை உணர்த்த இங்கு பகடு பயன்பட்டுள்ளது. இது போல படைமாட்சி குறித்து வள்ளுவர்,

**"ஒலித்தக்கா லென்னாம் உவரி எலிப்பகை**
**நாக முயிர்ப்பக் கெடும்" (குறள் : 763)**

என்று பாடியுள்ளார். வீரரல்லாத பெரும்படையை எலிகளுக்கும் ஒற்றைவீரனை நாகத்துக்கும் உவமிக்கிறார் வள்ளுவர். எலிக்குப் பாம்பு பகை. கடல் போலப் பரந்துபட்ட அளவில் எலிகள் நின்று ஆரவாரித்தாலும் நாகத்தின் பெருமூச்சிலே அவை அழிந்துபோகும் என்று பிறிதுமொழிதலணியாக இக்குறள் எலிகளையும் பாம்பையும் குறித்துச் சொல்கிறது. கடல் ஆரவாரிப்பது போல அனைத்து எலிகளும் கூடி ஒலித்தாலும் பயனில்லை. அது போல வீரமில்லாத வெற்றுப்படைகளின் ஆரவாரம் வீண். நாகம் பெருமூச்சுவிட்ட அளவில் எலிகள் அழிந்து போவது போல் தறுகண்மை மிக்க ஒரு வீரனே பெரும்படையை எதிர்த்து நின்று வெற்றிபெறுவான். உலகப் பொதுமறையாகிய வள்ளுவம் பாமரனுக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் எழுதப்பட்டது என்பதற்கு இது போன்ற பலகுறட்பாக்களைச் சான்று காட்டலாம்.

**"ஓதற்கெளிதாய் உணர்தற் கரிதாகி**
**வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்**
**உள்ளதொ றுள்ளுதொ றுள்ளமுருக்குமே**
**வள்ளுவர் வாய்மொழி மாண்பு" (திருவள்ளுவ மாலை)**

என மாங்குடி மருதன் பாடிய வள்ளுவம் பல்துறைகளைத் தன்னகத்தே கொண்டு குறுகிய வடிவமெடுத்து உணரும் தோறும் வானுயர நிற்பது. வள்ளுவர் ஒவ்வொரு நிகழ்வினையும் செய்தியையும் விளக்கும் போதெல்லாம் எளிய மனிதர் அறிந்திருந்தவற்றைக் கொண்டு அரிய செய்திகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். வானியல், விலங்கியல், தாவரவியல், உளவியல், வேளாண்மை, அரசியல், நிர்வாகம் என வள்ளுவர் சுட்டிக் காட்டாதது ஒன்றும் இல்லை என்பதே இக்கட்டுரை கூறும் உண்மையாகும்.

--------------------------------

## 110.பாவண்ணன் படைப்பில் தொன்மச் சிந்தனைகள்

**க.ரேவதி** முனைவர்பட்ட ஆய்வாளர் தமிழ் உயராய்வு மையம் பாத்திமா கல்லூரி

மித்(Myth) என்பதன் தமிழாக்கம் தொன்மமாகும் இலக்கியங்களின் ஆன்மாவாகத் திகழ்வது தொன்மம் என்கிறார் அரிஸ்டாட்டில். 'தொன்மத்திற்கு நார்த்ராப்.'.பிரை பின்வருமாறு விளக்கமளிக்கிறார். தொன்மம் கடவுளர்களையோ கடவுளையொத்த மனிதர்களையோ பாத்திரங்களாகக் கொண்டகதையென்றும் வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்டதுஎன்றும் இயற்கையிறந்த நிகழ்ச்சிகளைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும். தொன்மச் சிந்தனைகள் மறுவாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு மீட்டுருவாக்கம் பெற்றன. தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மீட்டுருவாக்கச் சிந்தனையைப் புகுத்தியவர் புதுமைப்பித்தன் ஆவார். பல எழுத்தாளர்கள் தொன்மக் கருத்துக்களை மறுவாசிப்பிற்கு உட்படுத்தியுள்ளனர். இவர்களுள் பாவண்ணனின் ஏவாளின் இரண்டாவது முடிவு, சுழல், திரை எனும் கதைகளில் இடம்பெற்றுள்ள மீட்டுருவாக்க சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

ஏவாளின் இரண்டாவது முடிவு என்னும் கதையில் குழந்தைப் பேறுஎன்பது திடீரென்று நின்று விடுகின்றது. நாளடைவில் அரசாங்கத்திற்கு இந்நிகழ்வு சிக்கலாகின்றது. இந்நிலையை மாற்ற அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை, குழந்தைப் பேறுநிகழாததன் காரணத்தை அறிதல் என்பதாக கதை நகர்கின்றது. இக்கதைக்கு ஆசிரியர் ஏவாளின் இரண்டாவது முடிவு என்று தலைப்பிட்டுள்ளார். ஏவாளின் இரண்டாவது முடிவு, குழந்தைப் பேறு இல்லாதிருப்பது என்றால் ஏவாளின் முதல் முடிவு என்ன? கிறிஸ்தவசமயத்தில் கடவுளால் ஆதாமின் துணைக்காக படைக்கப்பட்ட முதல் பெண் ஏவாள். ஆதாமிடம் உண்ணக்கூடாது என்றுரைத்த கனியை உண்ணுமாறு செய்தவள் ஏவாள். இக்குற்றத்திற்காக கடவுள்

**"பெண்ணிடம் உன் மகப் பேற்றின்**
**வேதனையைமிகுதியாக்குவேன்**
**வேதனையில் நீ குழந்தைகள் பெறுவாய்"**
**( வேதஆகமம் தொடக்க நூல் நான்காம் அதிகாரம் )**

என்று ஏவாளுக்கு தண்டனை வழங்குவதாக உள்ளது. பாவண்ணனின் கதையில் "சில பெண்களுக்கு வலியில்லாத மகப்பேறுநிகழ்கிறது. சில பெண்களுக்கு கருவிலேயே குழந்தை இறந்துவிடுகின்றது மகப்பேறுநிகழும் அறைகளில் சிரிப்பொலி." இந்நிகழ்விற்குப் பின் பெண்